2013 மே 9]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பவானி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே வினா தொடுத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே, அந்தப் பகுதியிலே போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்திலே, நிதிநிலைக்கு ஏற்ப, எதிர்காலத்திலே ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 446, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

446—

புவி வெப்பமடைதல்

***25981—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவி வெப்பமடைதலைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புவி வெப்பமடைதலைத் தடுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி சுற்றுச்சூழல் துறையும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஊக்குவிப்பினால் அனைத்துத் தொழிற்சாலைகளும் தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு (Cleaner Technology) மாறியுள்ளதுடன், ஓசோனை சிதைக்கும் பொருட்களை உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் அதற்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகப்படுத்தி

வருகின்றன. மேலும், தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரில் மாசினைக் குறைக்க சுண்ணாம்பு பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக, குரோமியம் தவிர்க்கப்படுகின்றது. மேலும், எரிசாராயம், சர்க்கரை மற்றும் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலைகளின் கழிவிலிருந்து மீத்தேன் வாயுவை உற்பத்தி செய்வதன்மூலம் மின் உற்பத்தி செய்யப்படுகின்றது. தொழிற்சாலை வளாகத்தில் 25 சதவீதம் நிலப்பரப்பில் மரங்களை வளர்க்க வாரியத்தால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. மேலும், புவி வெப்பமயமாவதற்கான காரணம் குறித்தும், அதனைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்தும், பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடையே பேரணிகள், கருத்தரங்கங்கள், கருத்துப் பட்டறைகள், நடைபயணங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள்மூலம் சுற்றுச்சூழல் துறையால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உயர்ந்த சிந்தனையில் புவி வெப்பமடைதலைத் தடுக்க 64-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ.29.44 கோடி செலவில் 64 இலட்சம் மரக் கன்றுகள் 32 மாவட்டங்களில் பரவலாக நடப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 65-வது பிறந்த நாளை முன்னிட்டு, 65 இலட்சம் மரக் கன்றுகள் ரூ.43.55 கோடி செலவில் நட்டு, பராமரிக்கவும் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முடியாது என்ற வார்த்தை எனது அகராதியில் இல்லையென்று' சொன்ன மாவீரன் நெப்போலியனைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்ற வார்த்தை எனது அகராதியிலும் இல்லை, எனது ஆட்சியிலும் இல்லையென்ற

2013 மே 9]

இலக்கணத்திற்கு உகந்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எப்பொழுதும் விவசாயத்தையே நம்பியிருந்த எங்களுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் வளாகத்தில் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் கிராஃபைட் தொழிற்சாலை மற்றும் பிற தொழிற்சாலைகள் இடம்பெறும்வகையில், புதிய தொழிற்பூங்கா அமைப்பதற்கு 7-5-2013 அன்று விதி 110-ன்கீழ் ஆணையிட்டதற்காக எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தின் சார்பாகவும், சிவகங்கை மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், மானாமதுரை தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்தில் 36 ஆண்டுக் காலமாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, இரண்டு முறை நிதியமைச்சராக இருந்திருக்கின்ற திரு. ப. சிதம்பரம் அவர்கள், பாராளுமன்றத்திற்குத் தேர்தல் வருகின்ற நேரத்தில் எல்லாம், நான் கிராஃபைட் தொழிற்சாலையைக் கொண்டுவருவேன், கொண்டுவருவேன் என்று சொல்லி 36 ஆண்டுக்காலமாக மக்களை ஏமாற்றி, இன்றைக்குக் கொல்லைப்புறமாக வந்து நிதியமைச்சராக இருந்து கொண்டிருக்கின்றார். திரு. ப. சிதம்பரத்தின் முகத்திரையைக் கிழிக்கும்வண்ணமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை மானாமதுரை தொகுதிக்கு அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இந்திய நாட்டினுடைய நிதியமைச்சராக இருக்கிறாரா? இல்லை இத்தாலி நாட்டினுடைய நிதியமைச்சராக இருக்கிறாரா என்ற சந்தேகம் எழக்கூடிய அளவிற்கு அவருடைய செயல்பாடு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே பதிவுசெய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை திரு. ரெங்கராஜன், உறுப்பினரின் பேச்சில் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லையே? (குறுக்கீடு) உறுப்பினர் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை, உட்காருங்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சிதம்பரம் அவர்கள் 1977 ஆம் ஆண்டு

காரைக்குடி தொகுதியிலே சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டு 200 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்று இந்த நாட்டைவிட்டே ஓடியவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. குணசேகரன், குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய ஒரு பேராசிரியர் புவி வெப்பமயமாகப் போகிறது (Global Warming) என்று சொன்னார். அமெரிக்காகூட அன்றைக்கு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இன்றைய சூழ்நிலையில், புவி வெப்பமடைதல் காரணமாக, நில அதிர்வுகள், கடும் மழை, புயல் போன்ற பல்வேறு இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே, அதைத் தடுப்பதற்காக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் சீக்கிரமாக கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ம. குணசேகரன்: புவி வெப்பமடைதலைத் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் புவி வெப்பமயமாதலைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, பசுமைப் போர்வைத் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இசைவாணையை வழங்கும்போது, மாசினைத் தடுக்கும் வகையில், அனைத்துத் தொழிற்சாலைகளும் தங்களது வளாகத்தில் 25 சதவிகித நிலப்பரப்பில், அடர்த்தியானக் கிளைகள் கொண்ட மரங்களை வளர்க்க வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் வெளியேறும் வாயுக்களின் அடர்த்தி குறைக்கப்படும்.

மேலும், தொழிற்சாலைகளில் கச்சா எண்ணெய்மூலம் பெறப்படும் எரிபொருட்களான பெட்ரோல், டீசல் மற்றும் நிலக்கரியின் உபயோகத்தைக் குறைத்து, மரபுசாரா எரிசக்தியை

2013 மே 9]

அதிகரிக்க வாரியம் அறிவுறுத்துகின்றது. இதன்மூலம் கரியமில வாயுவின் வெளியேற்றத்தைக் குறைக்க முடிவதோடு, வெளியேற்றப்படும் வாயுக்களிலுள்ள நச்சுத் தன்மை குறைந்து காற்று மாசுபடுவதும் தடுக்கப்படுகிறது.

முற்பகல் 10-25

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தூய்மையான தொழில்நுட்பங்கள் மூலம் தொழிற்சாலைகளில் கழிவுநீரைச் சுத்திகரிப்புச் செய்ய மேற்கொள்ளச் செய்வது மட்டுமன்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தத் தூய்மையான தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளது. வாரியத்தின் முனைப்பான ஆர்வம் மற்றும் ஊக்குவிப்புடன் எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்குப் பதிலாக சவ்வூடு கலன் பயன்படுத்துதல்; சிமென்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செயல்முறைக்குப் பதிலாக உலர் செயல்முறையினைப் பின்பற்றுதல்; கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. ஓசோனை சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் அரசின் தொடர் நடவடிக்கைகளினால் தற்சமயம் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகப்படுத்தி வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரக் கன்றுகளை நட்டால் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து, புவி வெப்பமடைதலைத் தடுக்க முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றார்கள். என்னென்ன மரங்களை நட்டால், புவி வெப்பமடைதலைத் தடுக்க முடியும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் அடர்த்தியான கிளைகளைக் கொண்ட மரங்களை நட்டாலே போதும். பொதுவாக, அடர்த்தியான கிளைகளைக் கொண்ட மரங்களை நடுவதன் மூலமாக கரியமில வாயுவின் வெளியேற்றம் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தட்பவெப்ப நிலை மாற்றம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை முழுவதுமாக பாதிக்கிறது. ஊரகப் பகுதிகளில் ஏற்றுக்கொள்ளத்தக்க தட்பவெப்ப நிலை மாற்றத்தைச் செயல்படுத்தும் 4 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் இதற்கான செயல் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது. தமிழக அரசால் அமைக்கப்பட்ட செயலாக்கக் குழு, 1. நீராதாரம் 2. நீடிக்கத்தக்க வேளாண்மை 3. நிலையான வசிப்பிடம் 4. வனம் மற்றும் பல்லுயிர் பெருக்கம் 5. ஆக்கத்திறன் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 6. கடலோர மேலாண்மை 7. அறிவாற்றல் மேலாண்மை ஆகிய 7 பிரிவுகள் குறித்து ஆய்வு செய்து கடந்தகால, நிகழ்கால நிகழ்வுகள் மற்றும் எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய தட்பவெப்ப நிலையை ஏற்றுக்கொள்வதற்கும், அதன் பாதிப்பைக் குறைப்பதற்குண்டான வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2013-2014 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் அறிக்கை தயாரிக்க ரூ.30 இலட்சம் வழங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 447, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

447—

தூர் வாருதல்

***6120—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்திலுள்ள தாசம்பட்டி அணை, நாகாவதி அணை, சஞ்சீவராயன்கோயில் அணை மற்றும் கூனம்பள்ளம் அணை ஆகியவற்றைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?